உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 26.05.2026 • மலர் 04 • இதழ்: 177 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 26.05.2026 • Vol : 04 • Issue : 177 • Page : 4 • Rs. 5/-

# என்னை எங்கேயும் தேட வேண்டாம்..!

## முதல்வர் விஜய்யின் குட்டி கதைக்கு மு.க.ஸ்டாலின் பதில்



திருவாரூர், ஜூன் 26

தமிழக சட்டப்பேரவையில் விஜய் சொன்ன 'அப்பாவைக்காணோம்' குட்டிக் கதை கடும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், "என்னை எங்கேயும் தேட வேண்டாம்; நான் மக்கள் மனதில் இருக்கிறேன்," என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்தார்.

திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் மதிவாணன் இல்ல திருமண விழாவை நடத்தி வைத்தார் திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின்.

பின்னர் விழாவில் ஸ்டாலின் பேசுகையில், "நாட்டில் மின்வெட்டுப் பிரச்சினை, டெல்டா மாவட்டத்தில் குறித்த நேரத்தில் விவசாயிகளுக்கு மேட்டூர் அணை தண்ணீர் திறக்க முடியவில்லை போன்ற பிரச்சினைகள் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற திமுக ஆட்சியில் குறித்த நேரத்தில் மேட்டூர் அணையை திறந்து வைத்துள்ளோம். இவற்றையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி சட்டப்பேரவையில் எடுத்துச்சொல்லிப் பேசினார்.

ஆனால் முதல்வராக உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல், "எங்கே உங்கள் அப்பாவை காணோம்!" என்கிறார். அப்பாவை அங்கே தேடாதீர்கள். அவர் மக்கள் மனதில் பதிந்திருக்கிறார். சட்டப்பேரவையில் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்கள் மன்றத்திலே நான் இருக்கிறேன் என்பதை உங்களிடத்தில் கூறிக் கொள்கிறேன்.

கடந்த 60 வருடங்களாக மக்களோடு மக்களாகத் தான் பணியாற்றி வருகிறேன். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் முதல்வராக இருந்தபோது, சென்றிருக்கிறேன். நான் ஆய்வுக் கூட்டம் நடத்தியதைப் போல யாரும் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி இருக்க மாட்டார்கள். கோட்டையில்தான் கோப்புகள் உள்ளன அந்த கோப்புகளை எடுத்துப் பாருங்கள்.

மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்களில் எல்லாம் நான் கையெழுத்துள்ளேன் அங்கெல்லாம் நான் இருக்கிறேன். என்னை தேடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மக்களோடு தான் இருக்கிறேன். அண்ணா தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தது ஒன்றே போதும், இந்த தமிழ்நாடு உள்ளவரை நான் தான் முதல்வர் என்று சொன்னதைப் போல, மகளிர் உரிமை திட்டம் இருக்கும் வரை இந்த ஸ்டாலின்தான் முதல்வர், கருணாநிதி கூட்டணி அமைத்தால் கூட்டணி கட்சியை பாதுகாப்பாக வைத்திருப்பார், அவர்களாகத் தான் கூட்டணியை விட்டு போவார்களே தவிர, வெளியேற்ற மாட்டார். அந்த வழியில்தான் நான் கூட்டணியை பாதுகாத்தேன். ஆனால் கூட்டணியே வேண்டாம் எனவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அதனையும் பரிசீலிப்போம்," என்றார்.

இந்த விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் முத்தரசன் மற்றும் திமுக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## 'லோ சுகர் நோ ஆயில்' கையெழுத்து இயக்கம் மாவட்ட கலெக்டர் ரேவதி துவக்கி வைத்தார்

தஞ்சாவூர் ஜூன் 26

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சார்பில் துரித உணவு வகைகள் மற்றும் சர்க்கரை எண்ணெய் பலகாரங்கள் தவிர்த்தல் குறித்து சர்க்கரை வேண்டாம், எண்ணெய் வேண்டாம், என்ற விழிப்புணர்வு பதாகையில் மாவட்ட கலெக்டர் ரேவதி கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்ததாவது

இந்தியாவில் ஊட்டச்சத்து குறை பாடுடன் உடல் பருமன், நீரிழிவு ,உயர் ரத்த அழுத்தம் இதே நோய் கள் போன்ற தொற்றா நோய் களின் பாதிப்பு அதிகரித்து வரு கிறது .மேலும் போஷன் டிராக்கர் தரவுகளின் படி ஆரோக்கியமற்ற உணவு முறைகள் கொழுப்புச்சத்து நிறைந்த உணவுகள் சர்க்கரை, உப்பு ஆகியவற்றை அதிகமாக உட்கொள்ளுதல் மற்றும் உடலுலைப்பற்ற வாழ்க்கை முறை ஆகியவற்றால் குழந்தைகள் 5 சதவீதம் அளவு உடல் பருமன் மற்றும் அதிக உடல் எடையுடன் இருப்பதாக கூறப்பட்டுள்ளது

இன்றைய காலகட்டத்தில் உடல் பருமன் மற்றும் தொற்றா நோய்கள் எதிர்த்து போராட ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உணவுப் பழக்கங்கள் மேம்படுத்துதல் குறித்து ஒவ்வொரு மனிதனும் விழிப்புணர்வு தேவைப் படுகிறது .

எனவே எண்ணெய் மற்றும் சர்க்கரை பதப்படுத்தப்பட்ட உணவு களை அதிகமாக உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மற்றும் ஆரோக்கியமான உணவு முறை, உடற்பயிற்சி, உணவு பழக்க வழக்கங்கள் மேம்படுத்துதல், குறித்து அரசு அலுவலகங்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பவர் களுக்கு விழிப்புணர்வு வழங்கும் வகையில் மாவட்ட கலெக்டர் வளாகத்தில் சர்க்கரை, உப்பு மற்றும் எண்ணெய் ஆகியவை அடங்கிய விழிப்புணர் பதாகை களை மாவட்ட கலெக்டர் ரேவதி கையெழுத்து இயக்கம் மூலம் துவக்கி வைத்தார்

இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சி யானது அனைத்து வட்டாரங்களி லும் மற்றும் அனைத்து அங்கன் வாடி மையங்களிலும் நடத்தப் பட்டது நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சாயிரா பானு மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்



## மதுரை மாநகர புதிய காவல் ஆணையர் பொறுப்பேற்பு

மதுரை மாவட்டம், ஜூன் 26

மதுரை மாநகர காவல் ஆணையராக S.ராஜேந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 1998 ம் ஆண்டு குரூப் 1 தேர்வில் காவல் துணை கண்காணிப்பாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து 2007 ஆம் வருடம் காவல் கண்காணிப்பாளராகவும் 2012 ஆம் ஆண்டு இ.கா.ப நிலை பெற்று 2019 சென்னை மாநகர பூக்கடை துணை ஆணையராகவும், 2020 காவல்துறை துணை தலைவராக பதவி உயர்வு பெற்று மதுரை சரக காவல்துறை துணைத் தலைவராகவும், நெல்லை மாநகர காவல் ஆணையராகவும் பணியாற்றி, அதன்பின் காவல்துறை தலைவராக 2024ல் பதவி உயர்வு பெற்று திருப்பூர் மாநகர காவல் ஆணையராக பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## குமரியில் குற்ற சம்பவங்களை கட்டுப்படுத்த போலீசார் நடை ரோந்து பணி தீவிரம்



நாகர்கோவில், ஜூன். 26

கன்னியாகுமரி மாவட்டத்தில் குற்றங்களை கட்டுப்படுத்த போலீசாரின் நடை ரோந்து பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில், வடசேரி மற்றும் புத்தேரி மருத்துவமனை பகுதிகளில் அண்மை காலமாக விரும்ப தகாத குற்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. மேலும் குமரியில் அனைத்து காவல் நிலையங்களிலும் அடிக்கடி பிரச்சினைகள் மற்றும் சமூக விரோத செயல்கள் நடக்கிறது. இது போன்ற பகுதிகளில் இரவில் போலீசார் வாகனங்களில் வந்து செல்வதுடன், காலை மற்றும் மாலை வேலைகளில் 2 போலீசார்விதம் நடந்து சென்று கண்காணிக்கும் வகையில் நடை ரோந்து பணி மேற்கொள்ள எஸ்பி ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி காலை மற்றும் மாலைகளில் வீக்அவர் நேரங்களில் 2 போலீசார் விதம் நடந்து சென்று காவலில் ஈடுபட்டு வருகின்றனர். பஸ் நிறுத்தங்கள், அதன் அருகில் உள்ள டீ மற்றும் குளிர்பான கடைகள் முன்பு நின்று கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து போலீசார் கூறுகையில்: குற்றவாளிகள் தவறுகளில் ஈடுபடும் முன்பே அதனை தடுக்க வேண்டிய காவலர்கள் கடமை. போலீசார் நடமாட்டம் அதிகமாக இருப்பதை பார்த்தால் யாரும் தேவையற்ற தகராறுகளில் ஈடுபட மாட்டார்கள். மக்களுக்கும் போலீசாரை பார்க்கும்போது ஒரு நம்பிக்கை கிடைக்கும். இதனை கருத்தில் கொண்டு பஸ் நிறுத்தம் மக்கள் கூடும் பகுதிகளில் மாவட்டம் முழுவதும் நடை ரோந்து தீவிர படுத்த எஸ் பி ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் மூலம் பெண்களை கேலி கிண்டல் செய்வது, வாகனங்களில் அதிவேகமாக செல்வது, கடைகளில் தகராறுகளில் ஈடுபடுவது போன்ற சம்பவங்கள் வலுவாக குறையும். மாவட்ட எஸ் பி, ஏ எஸ் பி, டி எஸ் பி மேற்பார்வையில் 37 இன்ஸ்பெக்டர்கள், 50 மேற்பட்ட எஸ்ஐகள், 250 காவலர்கள் இந்த பணியில் ஒரே நேரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




### தஞ்சாவூரில்

## தூய்மைப் பணிகளை தனியாருக்கு விடுவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் ஜூன் 26

தூய்மை பணிகளை தனியாருக்கு விடுவதைகண்டித்துதஞ்சாவூர்மாநகராட்சி அலுவலகம் முன்பு ஏ ஐ டி யு சி உள்ளாட்சி பணியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சிகளில் தூய்மை பணி மற்றும் ஓட்டுநர் பணிகளை தனியாருக்கு விடும் அரசின் அறிவிப்பை கண்டித் தும் தூய்மை பணிமற்றும் ஓட்டுநர் பணிகளை தனியாருக்கு விடக் கூடாது என வலியுறுத்தியும், தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஊதியம் ஏற்றுக்கொண்டபடி ரூபாய் 762 வீதமும், ஓட்டுநருக்கு ரூபாய் 802 வீதமும், வழங்க கோரியும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன

ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட செயலர்திருநாவுக்கரசுதலைமைவகித்தார் .நிர்வாகிகள் கலியபெருமாள் ,ஆனந்த், ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஆர்ப்பாட்டத்தில் ஏ ஐ டி யு சி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சந்திர குமார் தொடங்கி வைத்தார். உள்ளாட்சி சங்க மாநிலத்துணைத்தலைவர்தர்மகருணாநிதி நிறைவுரையாற்றினார்

ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் சேவையா, மாவட்ட செயலர் துரை. மதிவாணன், தெரு வியாபாரிகள் சங்க மாவட்ட செயலர் முத்துக் குமரன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரி மை இயக்க மாவட்ட தலைவர் அழகு. தியாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

## 13 வட்டாட்சியர்கள் இடமாற்றம்

தஞ்சாவூர் ஜூன் 26

தஞ்சாவூர் மாவட்டத்தில்13 வட்டாட் சியர்கள் மற்றும் வட்டாட்சியர் நிலை அலுவலர்கள் இடமாற்றம் மற்றும் நியமனத்திற்கு மாவட்ட கலெக்டர் ரேவதி உத்தரவிட்டார்

பட்டுக்கோட்டை தனி வட்டாட் சியர் (முத்திரை கட்டணம்) மூர்த்தி தஞ்சாவூர் வட்டாட்சியர் ஆகவும், கும்பகோணம் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) பிரேம்குமார் திருவையாறு வட்டாட்சியர் ஆகவும், பாபநாசம் வட்டவழங்கள் அலுவலர் அகஸ்தியன் பட்டுக்கோட்டை வட்டாட்சியர் ஆகவும், தஞ்சாவூர் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திப்புசுல்தான் திருவிடை மருதூர் வட்டாட்சியர் ஆகவும், தஞ்சாவூர் வட்டாட்சியர் சிவக்குமார் தஞ்சாவூர் தனி வட்டாட்சியர் ஆகவும் (நிலை எடுப்பு) திருவை யாறு வட்டாட்சியர் முருககுமார் தஞ்சாவூர் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டு ள்ளனர்

ஒரத்தநாடு வட்டாட்சியர்தர்மேந்திரா பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியராகவும்,( ஆதிதிராவிடர் நலம்) பட்டுக்கோட்டை வட்டாட்சியர் யுவராஜ் பாபநாசம் வட்ட வழங்க அலுவலராகவும், திருவிடைமருதூர் வட்டாட்சியர் சாந்த மீனா கும்பகோணம் தனி வட்டாட்சிய ராகவும்( சமூக பாதுகாப்பு திட்டம்) கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) உமா மகேஸ்வரி நாகப்பட்டினம் அலகு தனி வட்டாட்சியர் ஆகவும்( முத்திரை கட்டணம்) ஆகியோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியர் கண்ணன் (ஆதிதிராவிடர் நலம்) பட்டுக்கோட்டை தனி வட்டாட்சியர் ஆகவும் (முத்திரை கட்டணம்) தஞ்சாவூர் கோட்டாட்சியர் நேர்முக உதவியாளர் சுந்தர செல்வி தஞ்சாவூர் தனி வட்டாட்சியர் ஆகவும் (சமூக பாதுகாப்பு திட்டம்) பணியிட மாற்றம் செய்யப்பட்டு ள்ளனர்.

மகப்பேறு விடுப்பில் சென்ற தஞ்சாவூர் வட்டாட்சியர் அருள் மணி ஒரத்தநாடு வட்டாட்சியராகவு ம் நியமிக்கப்பட்டுள்ளார்

## மதுரையில் 2000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட போதை ஒழிப்பு பேரணி




மதுரை, ஜூன் 26

மதுரைமாவட்ட மருத்துவ சங்க அமைப்புகள் மற்றும் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி மாவட்ட நிர்வாகமும் இணைந்து போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடத்தினர். இந்த பேரணி மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா துவக்கி வைத்தார். மருத்துவ சங்க அமைப்புகள் மற்றும் இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்திய போதை ஒழிப்பு தின பேரணி மக்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் இணைந்து 2000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பேரணியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து ரேஸ் கோர்ஸ் விளையாட்டு திடல் சென்றடைந்தனர்.

# தென்காசி அருள்மிகு செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் கீர்த்தி சக்ரா விருது பெற்ற ராணுவ வீரருக்கு பாராட்டு விழா



தென்காசி, ஜூன்.26

தேனி மாவட்டம் காமயகவுண்டன்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் ராணுவ வீரர் லன்ஸ் நாயக். மீனாட்சி சுந்தரம். இவர் இந்திய ராணுவத்தில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிக்கும் 34 வது ராஷ்ட்ரிய ரைபில்ஸ் பிரிவில் பணியாற்றி வரும் நிலையில் கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி காஷ்மீர் குல்காம் மாவட்டத்தில் ராணுவத்தினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டையின் போது பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் மீனாட்சிசுந்தரம் முகம் மற்றும் தோள்பட்டையில் குண்டுகள் பாய்ந்து படுகாயம் அடைந்தார். காயம் அடைந்த நிலையிலும் எதிர்த்து போராடிய மீனாட்சி சுந்தரத்திற்கு துணிச்சலாக போராடிய அவர் வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில் வீரத்திற்கான 2 வது உயரிய விருதான கீர்த்தி சக்ரா விருதினை இந்திய அரசு அவருக்கு வழங்கி பாராட்டியுள்ளது. 2026 ஆம் ஆண்டு இவ்விருதினை பெற்ற 7 பேரில் இவரும் ஒருவர். இந்நிலையில் அவரை கௌரவிக்கும் விதமாக பாராட்டு விழா அருள்மிகு செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் சேர்மன் புதிய பாஸ்கர் தலைமை வகித்தார். தாளாளர் கல்யாணி புதிய பாஸ்கர் முன்னிலை வகித்தார்.முதல்வர் மணிகண்டன் வரவேற்றார். விழாவில் மாணவர்களுடன் கலந்துரையாடிய ராணுவ வீரர் மீனாட்சி சுந்தரம் பேசியதாவது

இளம் வயதுடைய இளைஞர்கள் ரத்தம் சூடாக இருக்கும் போது ஏதாவது சாதித்திட வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என வயதையும் நேரத்தையும் வீணடிக்க கூடாது. நமது நாடு அமைதியாக உள்ளது அதை அப்படியே இருக்க வேண்டும் ஏதாவது கொள்கைகளைக் கொண்ட தீவிரவாத இயக்கமோ, அமைப்போ இந்தியாவை கஷ்டப்படுத்தினால் அவர்களுக்கு என்ன மொழி புரிகிறதோ அந்த மொழியில் கற்றுக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். மத்திய மாநில அரசுகளும் தயாராக உள்ளது. நமது நாடு ஒரு ஜனநாயக நாடு நாம் மற்ற நாடுகளில் போய் எந்த ஒரு பதவிக்கும் வர முடியாத நிலையில் இந்தியாவில் யார் வேண்டுமானாலும் எந்த பதவிக்கும் வர முடியும். இந்திய குடியரசுத் தலைவர் பழங்குடியின மக்களை சேர்ந்தவர் தேநீர் கடையில் வேலை பார்த்தவர் இன்று நமது பாரத பிரதமர். நடிப்புத்திறனை கொண்டவர் இன்று நமது தமிழகத்தின் முதல்வர். இந்த சுதந்திரம் இந்தியாவில் மட்டுமே உள்ளது. இந்த வாய்ப்பும் சுதந்திரமும் மற்ற நாடுகளில் கிடையாது. நம் நாடு அமைதியாக உள்ளது அமைதியாக இருக்கவும் நாட்டிற்காக போராட வேண்டும். ராணுவம், காவல்துறை, அரசியல் என எந்தத் துறையில் சென்றாலும் நேர்மையாக இருக்க வேண்டும். ஊழலை ஒழிக்க வேண்டும் திறமை உள்ளவர்கள் வெளியில் வராததற்கு காரணம் இதுவே. எனவே இளைஞர்கள் வயதை வீணடிக்காமல் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்து செயல்பட வேண்டும் என்று பேசினார். முன்னதாக இக்கல்லூரியில் பயின்ற இரண்டு மாணவர்கள் தற்போது ராணுவத்தில் பணி புரிந்து வருகின்றனர் அவர்களையும் பாராட்டி கௌரவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரியில் தமிழக அரசு மற்றும் காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண்கபிலன் கொடியசைத்து துவக்கி வைத்தார்




தருமபுரி ஜூன் 26

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைமுன்புதமிழக அரசு மற்றும் காவல்துறை சார்பில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண்கபிலன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி நிர்வாகிகள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஏராளமான கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் இருந்து தொடங்கிய பேரணி, நகரின் முக்கிய சாலைகள் வழியாக சென்று 4 ரோடு, ரோட்டரி பகுதியில் நிறைவடைந்தது. பேரணியில் பங்கேற்ற மாணவிகள் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி சென்றனர்.

மேலும் "போதை இல்லா தமிழகம் உருவாக்குவோம்", "இளைஞர்களின் எதிர்காலத்தைகாப்போம்", "போதைப்பொருளை ஒழிப்போம்" உள்ளிட்ட முழக்கங்களை எழுப்பி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண் கபிலன், போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களின் கல்வி, உடல்நலம் மற்றும் எதிர்கால வாழ்க்கையை கடுமையாக பாதிப்பதாக தெரிவித்தார். போதைப்பொருட்களுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புணர்வுடன் இருந்து, சமூகத்தில் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு தொடர்பான தகவல்கள் தெரிந்தால் உடனடியாக காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், போதைப் பொருள் இல்லாத பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இந்த விழிப்புணர்வு பேரணிமூலம் மாணவர்கள்மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் ஒழிப்பின்அவசியம்குறித்தவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன் போதை இல்லாத சமுதாயத்தை உருவாக்க உறுதி மொழியும் ஏற்கப்பட்டது. இந்த பேரணியில் கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஒருநூறாம்வயலில் காட்டு பன்றி தாக்கி விவசாயி படுகாயம்



மார்த்தாண்டம், ஜூன்.26

குமரி மலையோர கிராமமான ஒருநூறாம்வயல் அருகே உள்ள ஆனைக்குளம் பகுதியை சேர்ந்த ஷீலா என்பவரது கணவர் விஜயன். இவர் நேற்று காலை தனது சொந்த நிலத்தில் வேலை செய்ய சென்றபோது காட்டு பன்றிகள் கூட்டம் தாக்கியதில் படுகாயம் அடைந்தார். புதருக்குள்மறைந்திருந்தகாட்டுபன்றிகள் திடீரென வந்து தாக்கியதில் விஜயனின் இடது கால் முட்டியில் பலத்த உள்காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் கடையால் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குமரி வனப் பகுதிகளில் சமீப காலமாக ஒரு பக்கம் காட்டு யானை அச்சுறுத்தல், மறுபக்கம் காட்டு பன்றி தொல்லை என வனவிலங்கு மனித மோதல் இப்பகுதியில் அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் கடும் அச்சத்தில் உள்ளனர். வனத்துறையினர்உடனடியாகதலையிட்டு விவசாய நிலங்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும், வனவிலங்குகளை வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மைத்துறை சார்பாக, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர்.பொ. .ராஜா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர். பொ .உமா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர்.பொ. .குணவதி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் . நிர்மலதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியார்.வேளாண்மை. .பா.ஏஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.




# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு தொடக்க விழா

ஈரோடு ஜூன் 26

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 2026 2027 கல்வியாண்டில் புதிதாகச் சேர்ந்துள்ள முதலாமாண்டு மாணவர்களுக்கான பட்ட வகுப்புகள் தொடக்க விழா அறக்கட்டளை தலைவர் தேவராஜன் செயலாளர் சத்தியமூர்த்தி, பொருளாளர் கிருஷ்ணன் ஆகியோரின்வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. விழாவில், தாளாளர் சச்சிதானந்தன் வரவேற்றார் . அறக்கட்டளையின் உபதலைவர் மருத்துவர் குமாரசுவாமி தலைமையுரை வழங்கினார்.

கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் சுவாமி நாராயணானந்த மஹராஜ் அனைத்து மாணவர்களுக்கும் தங்களின் வருங்கால வாழ்க்கை நல்லவாழ்க்கையாக அமைய அருளாசி வழங்கி பண்பு, பக்தி, படிப்பு இம் மூன்றும் உங்களை உயர்த்தும் அதனால் புத்தகங்களை அன்றாடம் வாசித்து வாழ்க்கையை உயர்த்தவேண்டும் என்றும் குறிக்கோளை அடையும் வரை அயராது உழையுங்கள் என்று கூறினார் .

சிறப்பு விருந்தினராக கோவை பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரியின் ஆங்கில பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு உரை வழங்கினார். மாணவர்கள் ஏட்டுக்கல்வியைத் தாண்டி நடைமுறை வாழ்வியலையும் கற்றுத் தேர்ந்து சிகரம் தொட வேண்டும்; உயர்வான சிந்தனைகளே உங்களை உயர்த்தும் என்றும் ஒவ்வொருவருக்குள்ளும் தனித்தனித் திறமைகள் உள்ளன அதனால் யாரையும் யாரோடும் ஒப்பிடாதீர்கள்; வாழ்க்கை தனித்துவமானது சமூகத்தோடு சேர்ந்து உயர்ந்து நில்லுங்கள் என்றும் தன்னம்பிக்கை சார்ந்த பல்வேறு எழுச்சியூட்டும் சிந்தனைகளோடு எடுத்துரைத்து மாணவரையும் பெற்றோரையும் ஈர்க்கும் வகையில் சிறப்பாகப் பேசினார். கல்லூரி இறுதித்தேர்வில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 100% தேர்ச்சி வழங்கிய பேராசிரியர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது.

இவ்விழாவில் அறக்கட்டளையின் உபதலைவர்கள் இளங்கோ, வெங்கடாசலம், இணைச்செயலாளர் தங்கவேல், பாரம்பரிய பாதுகாவலர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். கொங்கு கலை அறிவியல்ழ கல்லூரியின் முதல்வர் முனைவர் வாசுதேவன் கல்லூரியில் மாணவர்கள் விதிமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று பேசினார். முடிவில் வணிகவியல் நிறுமச் செயலியல் மற்றும் தொழில்சார் கணக்குப் பதிவியல் துறைத்தலைவர் முனைவர் அழகு அப்பன் நன்றி கூறினார் .

# ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் சார்பில் பயிற்சிகள்: மாவட்ட கலெக்டர் தகவல்

நாகர்கோவில், ஜூன்.26

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலானபயிற்சிகள்வழங்கப்பட்டுவருகிறது. அதன் அடிப்படையில் தாட்கோ, மற்றும் மத்திய பெட்ரோ கெமிக்கல்ஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு நெகிழி செயலாக்க இயந்திர இயக்குபவர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராகவும், பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவராகவும், வயது வரம்பு 18 முதல் 35 வயதிற்குள்ளும், மற்றும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சி சென்னை மாவட்டத்தில் நடைபெற உள்ளது. கால அளவு நான்கு மாதங்கள் ஆகும்.பயிற்சி பெறும் காலங்களில் இளைஞர்களுக்கு உதவித் தொகையாக ஒரு மாதத்திற்கு ரூ.2000/ வீதம் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் தேர்ச்சி பெறும் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக வேலை வாய்ப்புக்கான வழிவகை செய்யப்படும். ஆரம்ப கால மாத ஊதியமாக சுமார் ரூ.18000/ முதல் ரூ.22,000/ வரை வருவாய் ஈட்டும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இப்பயிற்சியில் சேருவதற்கு தாட்கோ இணையதளமான (www.tahdco.com) என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.



# குமரியில் அனைத்து பகுதிகளிலும் தெரு விளக்குகள்: கலெக்டர் அறிவுறுத்தல்

நாகர்கோவில், ஜூன். 26

நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் கன்னியாகுமரி நகராட்சிபகுதிகளில்இரவுநேரங்களில்தெருவிளக்குகள் எரிகிறதா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் மு. பிரதாப் நேரில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலைய முகப்பு, வடிவீஸ்வரம், தேர்மூடு பகுதிகளில் தெருவிளக்கு அனைத்தும் பழுதின்றி எரிகிறதா என்று நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பழுதடைந்த தெருவிளக்குகளை உடனடியாக மாற்றிட மாநகராட்சி பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்துகன்னியாகுமரிநகராட்சிக்குட்பட்ட நகரின் முக்கிய சந்திப்புகள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்கள், சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் கடற்கரைச் சாலைப் பகுதிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# உதயகிரி கோட்டை, இரணியல் அரண்மனை பகுதிகளை பார்வையிட்ட கலெக்டர் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவு



நாகர்கோவில், ஜூன்.26

பத்மநாபபுரம் நகராட்சிக் குட்பட்ட புலியூர்குறிச்சி அருகில் அமைந்துள்ள உதயகிரி கோட்டை வேணாடு அரசரான ஸ்ரீ வீரவிமர்மர் காலத்தில் மண்கோட்டையாக கட்டப்பட்டு பின்னர் மார்த்தாண்டவர்மர் காலத்தில் கற்கோட்டையாக மாற்றியமைக்கப்பட்டது.

உதயகிரிக்கோட்டையில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது உதயகிரி கோட்டை பல்லுயிர் பூங்காவாக செயல்பட்டு வருகிறது. உதயகிரி கோட்டை பல்லுயிர் பூங்கா மாவட்டத்தின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். இந்த கோட்டையை குமரி கலெக்டர் பிரதாப் பார்வையிட்டார்.

பல்லுயிர் பூங்காவினை புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து அந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட பீரங்கி தளத்தினை புனரமைத்து, சுற்றுலா பயணிகள் வந்த இரசிக்க கூடிய நல்ல சூழலை உருவாக்கிட கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆகவே உலக அளவில் சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் அளவுக்கு பல்லுயிர் பூங்கா மேம்படுத்தப்படும். என கூறினார். தொடர்ந்து பூங்காவில் உள்ள அரிய வகை தாவரங்கள் மற்றும் பல்லுயிர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலெக்டர் ஆலோசனை நடத்தினார்.

தொடர்ந்து இரணியல் அரண்மனையில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார். சுமார் 2.16 ஏக்கர் பரப்பளவில் அமைந்தள்ள இரணியல் அரண்மனை கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள்நிருவாகத்தின்கீழ்அமைந்தள்ளது. இந்த அரண்மனை இயற்கை மற்றும் காலத்தினால் மிகவும் சிதலமடைந்த நிலையில் அதனை தொன்மை மாறாமல் புனரமைக்க தமிழ்நாடு அரசு ரூ.4.85 கோடி மதிப்பில் புதுப்பித்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகளை விரைந்து முடித்து சுற்றுலா பயணிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரதுறைசார்ந்த அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். நடைபெற்ற ஆய்வில் இணை ஆணையர் இந்து சமய அறநிலை துறை ஜான்சி ராணி, நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, உதவி செயற்பொறியாளர் ராஜ்குமார், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஒடிசா மாநிலத்தில் கொள்ளையடித்த கள்ளக்காதலர்கள் 5 ஆண்டுகளுக்கு பின் ஆரல்வாய்மொழியில் கைது



நாகர்கோவில், ஜூன். 26

ஒடிசா மாநிலம் மாலன்கிரி பகுதி சேர்ந்தவர் சுபாஷ் பிரசாத் பாட்டில். அந்தப் பகுதியில் நகைக்கடை வைத்துள்ளார். இந்த நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு இவரது முன்பு பக்கத்து வீட்டில் ஆந்திர மாநிலம் குண்டூர் பகுதியை சேர்ந்த ஜான் பால் (21), அர்ச்சனா (39) ஆகியோர் வாடகைக்கு குடியேறினர். தங்களை கணவன் மனைவி போல் காட்டிக்கொண்ட இருவரும் சுபாஷ் பிரசாத் பாட்டிலுடன் நல்ல நட்புடன் பழகி வந்தனர். இதனால் 2 பேரும் அடிக்கடி நகைக்கடைக்காரரின் வீட்டுக்கு சென்று வந்தனர்.

சம்பவத்தன்று லட்டில் மயக்க மருந்து கலந்து கொடுத்து சுபாஷ் பிரசாத் பாட்டில் வீட்டில் இருந்த 700 கிராம் தங்கம் மற்றும் ரூ 2 லட்சம் ரொக்க பணத்தை கொள்ளை அடித்து விட்டு ஜாண்பால், அர்ச்சனா தப்பித்தனர். இந்த சம்பவம் ஒடிசாவில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

இது குறித்து ஒடிசா போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய இருவரையும் தேடி வந்தனர். இந்த நிலையில் போலீசார் விசாரணையில் ஜான்பால், அர்ச்சனா ஆகியோர்கணவன்மனைவி இல்லை எனவும், கள்ள காதலர்கள் என்பதும் தெரிந்தது. மேலும் அவர்கள் ஒவ்வொரு மாநிலமாக சென்று வாடகைக்கு குடியேறி, இனிப்பில் மயக்க மருந்து கலந்து கொடுத்து நகை பணத்தை கொள்ளை அடிப்பது தெரிய வந்தது. இவ்வாறு கிடைத்த பணத்தை ஆந்திர மாநிலம் குண்டூரில் நிலம் மற்றும் வீடுகள் வாங்கி சொகுசாக வாழ்ந்து வந்ததும் அம்பலமானது. எனினும் ஒவ்வொரு மாநிலமாக இவர்கள் மாறி மாறி செல்வதால் ஒடிசா போலீசாரால் கள்ளக்காதல் ஜோடியை நெருங்க முடியாமல் இருந்தனர்.

இந்த நிலையில் தமிழகத்தில் நாகர்கோவில் வடசேரி பகுதியில் உள்ள வீட்டில் வாடகைக்கு இருந்து கொண்டு. ஆரல்வாய்மொழி நான்கு வழிச்சாலை பகுதியில் உள்ள ஒரு தனியார் ஓட்டலில் வேலை செய்து வருவது ஒடிசா போலீசாருக்கு தெரிய வந்தது. இதை அடுத்து 5 ஆண் மற்றும் ஒரு பெண் என 6 ஒடிசா மாநில போலீசார் கடந்த சில நாட்களுக்கு முன்பு நாகர்கோவில் வந்தனர். பின்னர் ஒரு வீட்டில் தங்கி இருந்து 2 பேரையும் கண்காணித்து வந்தனர். ஆரல்வாய்மொழியில் உள்ள ஓட்டலுக்கு சென்று அங்கு வேலையில் இருந்த ஜான் பால் மற்றும் அர்ச்சனாவை கையும் களவுமாக பிடித்தனர். பின்னர் 2 பேரையும் ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தியதில் ஒடிசா மாநிலத்தில் கொள்ளை அடித்ததை ஒப்புக்கொண்டனர்.

பின்னர் ஒடிசா போலீசார் ஆரல்வாய்மொழி போலீசார்மூலம் 2 பேரையும் பூதப்பாண்டி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். பின்னர் இருவரையும் பின்னர் இருவரையும் கோர்ட் உத்தரவின் பேரில் ஆந்திர மாநிலத்திற்கு அழைத்து சென்றனர்.

# டாக்டர்.ஆர்.வி.கலை அறிவியல் கல்லூரியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு



கோவை ஜூன்:26

காரமடை, டாக்டர். ஆர். வி.கலை அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம், போதைப்பொருள் தடுப்பு அமைப்பு மற்றும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலரும், கணிதவியல் துறைத்தலைவருமான உமா பிரியா அனைவரையும் வரவேற்றார்.

கல்லூரி முதல்வர் முனைவர்.சி.என். ரூபா தலைமையேற்று தலைமை உரையாற்றினார். மேட்டுப்பாளையம் துணை காவல் கண்காணிப்பாளர் பாஸ்கர் மற்றும் காரமடை,காவல் ஆய்வாளர் முருகையன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.அவர்கள் பேசிய உரையில்,"போதை கலாச்சாரம் இன்று இளைஞர்கள் மத்தியில் மிக அதிகமாக பரவி வருகிறது. அதற்கு அடிமையாகி விட்டால் அவர்களை அது அழிவின் பாதைக்கு அழைத்துச் செல்லும். இதனால் வீட்டிற்கும்,சமுதாயத்திற்கும் கேடு உண்டாகும்.இதனை வேரோடு களைய வேண்டும். வயது வரம்பு இன்றி போதைப் பழக்கம் சமுதாயத்தில் வேரூன்றி உள்ளது. தவறான நட்பினால் இன்றைய இளைஞர்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாகி பல குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். போதைப்பொருள் உபயோகிப்பவரின் உடல் நலம் பாதிக்கப்படுவதோடு உயிரிழக்கும் அபாயமும் உள்ளது. மனக்கட்டுப்பாடும்,சுய முயற்சியும் இருந்தால் எளிதாக அதிலிருந்து மீண்டு வர முடியும்.

யாராவது போதைப்பொருளை பயன்படுத்துவது தெரிந்தால் அதனை காவல்துறைக்கு தெரிவிக்கலாம். காவல்துறை அதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்"என்று மாணவர்களுக்கு பல கருத்துக்களை எடுத்துரைத்தனர்.நிகழ்வின் நிறைவாக உயிர் தொழில்நுட்பவியல் துறைத்தலைவர்சாரா நன்றியுரைகூறினார்.



சென்னைமாவட்டம், அம்பத்தூர்வட்டாட்சியர்அலுவலகத்தில்வருவாய்தீர்வாயம் பசலி எண் 1435 அம்பத்தூர் வட்டத்திற்கு உட்பட்ட , ஒரகடம், மேனாபேடு, பட்டரவாக்கம், கொரட்டூர், அம்பத்தூர், அத்திப்பட்டு, மண்ணூர்பேட்டை, காக்கம்பள்ளம், முகப்பேர், பாடி ஆகிய கிராம மக்களுக்கு உரிய குறைகளான பட்டா, ஓ ஏ பி , வாரிசு சான்று, சாதி சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை தொடர்பான மனுக்களை ஜமாபந்தியில் பெற்று நிறைவேற்றி தருவதாக வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் தீர்வாய அலுவலர் மு.சதீஷ் குமார் உறுதியளித்தார்.

## விளாத்திகுளம் அருகே

# மது போதையில் காரை அதிவேகமாக ஓட்டி பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்து:5 பேர் காயம்



விளாத்திகுளம் ஜூன் 26.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சுப்பிரமணியபுரம் பகுதியை சேர்ந்த ஆத்தியப்பன் என்பவரின் மகன் விஜய் (25), இவர் தனது உறவினரின் திருமணத்திற்காகவிளாத்திகுளம்அருகேஉள்ளகே.துரைச்சாமிபுரம் கிராமத்தில் இருந்து, கே.துரைச்சாமிபுரம் கிராமத்தைச்சேர்ந்த நவீன்குமார்(18), மற்றும் கடால்குடி, பூசனூர் கிராமத்தை சேர்ந்த முருகேசன்(26), மாரிமுத்து (39), கண்ணன்(40) நான்கு பேரையும் அழைத்துக் கொண்டு கே.துரைசாமிபுரம் கிராமத்திலிருந்து விளாத்திகுளம் நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக இடைச்சியூரணி கிராமம் அருகே கட்டுப்பாட்டை இழந்த கார் சாலை ஓரம் இருந்த சிறிய பாலம் மீது மோதி கார் தூக்கி வீசப்பட்டு பள்ளத்திற்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. காரை கோவில்பட்டியை சேர்ந்த விஜய் என்பவர் மது போதையில் ஒட்டியதாகவும், கே.துரைச்சாமிபுரம் கிராமத்தில் இருந்து கிளம்பும்போதே, கார் அசுர வேகத்தில் சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து விபத்து நடந்த இடத்திற்கு வந்த விளாத்திகுளம் காவல் நிலைய போலீசார் தலைகுப்புற கவிழ்ந்து கிடந்த காரை நேராகத் திருப்பி வைத்து காரில் இருந்தவர்களை மீட்டு உடனடியாக விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில்

# போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஈரோடு ஜூன் 26

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கந்தசாமி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு சார்பில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

"போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாக மாட்டேன். எனது குடும்பத்தி னரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்கு உள்ளான வர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்து எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்கு துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன் என்று ஆட்சியர் உறுதி மொழி வாசித்தார். இதை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பின் தொடர்ந்து வாசித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியையொட்டி 15 குழந்தைகள் இல்லம் சார்பில் மாணவ மாணவியர்கள் போதை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து கருத்துக்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு இருந்தது இதில் முதல் 3 இடங்களை பெற்ற 3 குழந்தைகள் இல்லம் மாணவ, மாணவியர்களுக்கு கோப்பை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மேலும், பேருந்து நிலைய காவல் அலுவலர்கள். இரயில் நிலைய காவல் அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், சிங்கப்பெண் அதிரடிப்படையினர். ஆகியோர்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு அலகில் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியமைக்காக பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார். மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் தஉமாமகேஸ்வரி, அலுவலக மேலாளர் (கலால்) வீரலட்சுமி. குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக ஒருங்கிணைப்பாளர் கமலவேணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருட்டு பைக்குடன் குற்றவாளியை பிடித்த பெண் ஊர்காவல் படை வீராங்கனை: மாவட்ட எஸ்பி பாராட்டு



நாகர்கோவில், ஜூன்.26

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் காவல்துறையுடன்இணைந்துஊர்க்காவல் படையினரும் இணைந்து செயல்படுகின்றனர்.

இந்த நிலையில் செட்டிகுளம் சந்திப்பில் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊர்க்காவல் படையை சேர்ந்த ஜலின் பிரபா என்பவர் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த பகுதி வழியாக வந்த சந்தேகத்திற்கிடமான நபரை பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்தார்.

தொடர்ந்து காவல்துறையினர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அந்த நபர்தக்கலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பனவிளை பகுதியில் நடைபெற்ற இருசக்கர வாகன திருட்டு வழக்கில் தொடர்புடைய , இடலாக்குடி குளத்தூர் பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரின் மகன் ராஜகுமரன்(26) என்பது தெரிய வந்தது. மேலும் இவர் மீது பல்வேறு காவல் நிலைய வழக்குகள் நிலுவையில் உள்ளதும், போலீசாரால் தேடப்பட்டு வந்த குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

குற்றவாளியை கண்டறிந்து கைது செய்ய முக்கியபங்காற்றிய ஊர்க்காவல்படையை சேர்ந்த ஜலின் பிரபாவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டு சான்றிதழ் மற்றும் பண வெகுமதி வழங்கி கௌரவித்தார்.

## தமிழக முதல்வர் பிறந்த நாளினை முன்னிட்டு

# கிருஷ்ணகிரியில் நடைபெற்ற சிலம்பம் போட்டி மற்றும் மருத்துவ முகாம்

## மத்திய மாவட்ட தவெக செயலாளர் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி, ஜூன் 26

கிருஷ்ணகிரி மத்திய மாவட்ட தவெக கட்சி சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்தநாளினை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் இரத்த தான முகாம், மருத்துவ முகாம், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைப் பெற்று வருகிறது, இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் சிலப்பாட்டம் கழகத்தின் சார்பில் சிலம்பாட்ட போட்டி நடைப்பெற்றது, தமிழர்களின் வீரத்தினை பறைச்சான்றும் விதமாக நடைப்பெற்ற இந்த சிலப்பம் போட்டியை தவெக மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு துவக்கி வைத்தார். இதனையடுத்து சிலப்பாட்ட வீரர், வீராங்கனைகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களை பரவசப்படுத்திர்கள் பின்னர் போட்டியில் வெற்றி பெற்ற சிலப்பாட்ட வீரர், வீராங்கனைகளுக்கு பரிசு மற்றும் மெடல் ஆகியவற்றினை தவெக மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் வழங்கினார்.

மேலும் இதை போல கிருஷ்ணகிரி, வேட்டியம்பட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தமிழக முதல்வர் பிறந்த நாளினை முன்னிட்டு நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களில் ஏராளமான ஏழை எளிய மக்கள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர், அப்பேது மேற்கு மாவட்ட இணைச் செயலாளர் ஹரிஸ், மாவட்ட பொருளாளர் முருகேசன், வேப்பனம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் நாகராஜன், மாவட்ட மகளீர் அணி தலைவி இந்திரா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஹேமபிரியா, மாவட்ட மாவட்ட மாணவர் மாணவரணி அமைப்பாளர் அருள் குமார், மருத்துவர் அணி அமைப்பாளர் பார்த்திபன், நகர கழகம் ஹரிபிரசாந்த், மற்றும் தவெக நிர்வாகிகளான தென்னரசு, ஏஜாஸ் கோல்டன் சுரேஷ், வேலன், சங்கர், ஆனந்த், மற்றும் சிலப்பாட்ட பயிற்சியாளர்கள் குரு ராகவேந்திரன், சரவணன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டனர்

# அருமனை அருகே குளத்தில் விழுந்து புது மாப்பிள்ளை உயிரிழப்பு



மார்த்தாண்டம், ஜூன்.26

அருமனைஅருகே சிதறால் பகுதியை சேர்ந்தவர் கணேசன் மகன் தனுஷ் (24). கூலி தொழிலாளி. இவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு காதல் திருமணம் காவல் நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிலையில் தனது நண்பர்களுடன் நண்பர்களுக்கு விருந்து அளிப்பதற்காக அந்த பகுதி கல்லுநாட்டிகுளம் என்ற பகுதிக்கு சென்றுள்ளார். அங்கு நண்பர்களுடன் நேரம் கழித்த பின்னர் குளத்தில் குளிக்க இறங்கியதாக கூறப்படுகிறது. அப்போதுஎதிர்பாராதவிதமாககுளத்துக்குள் ஆழமான பகுதிக்கு தனுஷ் சென்று விட்டார். இதனால் அவர் தண்ணீரில் மூழ்கியுள்ளார். இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த நண்பர்கள் அவரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அவரை மீட்க முடியவில்லை. ஆகவே இது குறித்து அருமனை போலீஸ் நிலையம் மற்றும் குலசேகரம் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் குளத்தில் மூழ்கி கிடந்த தனுஷின் உடலை மீட்டனர். பின்பு அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அருமனை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திருமணம் முடிந்து சில நாட்கள் ஆன நிலையில் குளத்தில் மூழ்கி வாலிபர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை கூறி 6 லட்சம் மோசடி செய்த தவெக நிர்வாகி



விளாத்திகுளம் ஜூன் 26.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள நூத்தலக்கரை கிராமத்தைசேர்ந்த சோலை ரெட்டி என்பவரின் மகன் ஹெமேஸ் இவர் யூட்டுபில் வந்த விளம்பரத்தை நம்பி திருச்சி தில்லைநகர் பகுதியில் உள்ள சிம்போனிக் ஜாப் கன்சல்மெண்ட் என்ற நிறுவனத்தை அணுகி, அந்த நிறுவனத்தை நடத்தி வரும் தமிழக வெற்றி கழக நிர்வாகியான சிம்பு என்ற தமிழ்ச்செல்வனிடம் தான் DEEE படித்துள்ளேன் தனக்கு வெளிநாட்டில் வேலை வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு சிம்பு என்ற தமிழ்ச்செல்வன் சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு உள்ளது மாதம் சிங்கப்பூர் மதிப்புக்கு மாதம் 1400 டாலர் சம்பளம் வழங்கப்படும், என்று கூறி GPAY மூலமாகவும், கையில் ரொக்கமாகவும் சேர்த்து சுமார் 7 லட்சத்து 500 ரூபாய் கொடுத்துள்ளனர்.

பின்னர் சிம்பு என்ற தமிழ்செல்வன் மூலம் கடந்த நவம்பர் மாதம் சிங்கப்பூர் சென்ற ஹேமஸ்க்கு, சிங்கப்பூரில் தமிழ்ச்செல்வன் கூறிய வேலை இல்லாமல் மாற்று வேலை வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது, மேலும் சிங்கப்பூரில் உள்ள அந்த நிறுவனம் உங்களுக்கு எங்களிடம் போதிய வேலையும் சம்பளமும் இல்லை அதனால் நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறியதாக கூறப்படுகிறது, இது குறித்து ஹேமேஸ் தமிழ்ச்செல்வனிடம் செல்போனில்தொடர்புகொண்டு கேட்ட பொழுது, நீ ஊருக்கு வா உனது மீதமுள்ள தொகையை தருகிறேன் என்று கூறியுள்ளார். ஆனால் குடும்ப வறுமை சூழ்நிலை காரணமாகவும், ஏற்கனவே தனது தந்தை சோலைரெட்டி வீட்டு பத்திரத்தை தனியார் நிறுவனத்தில் அடமானம் வைத்து தான் தன்னை வெளிநாடு அனுப்பியதால், சிங்கப்பூரில் இருந்த வாரே மாற்று வேலை ஏற்பாடு செய்து தற்போது வேலை பார்த்து வருகிறார்.

இந்நிலையில் சோலை ரெட்டி தமிழ் செல்வனிடம், நீங்கள் கூறியது போல் அங்கு எனது மகனுக்கு வேலை இல்லை, இங்கு செல், என்று அலை கழித்ததாகவும் கடைசியில் தில்லைநகர் போலீசார் விசாரணை மேற்கொண்டதாகவும் அந்த விசாரணையில் அங்கிருந்த போலீசார் எங்களிடம் கேட்டால் நீ ஏஜென்சி இடம் பணம் கொடுத்தாய்?

திருச்சியில் வெளிநாட்டுக்கு ஆள் அனுப்பும் எந்த ஏஜென்சியும் முறையாக உரிமம் பெறவில்லை என்று காவல் நிலையத்திற்குள்போலீசார்பேசும்வீடியோ வெளியாகி உள்ளது. இதுகுறித்து சோலை ரெட்டி கூறுகையில் நாங்கள் வீட்டு பத்திரத்தை அடமானம் வைத்து அந்த வீட்டை கூட திருப்ப முடியாத சூழ்நிலையில் இருந்து வருகிறோம், எனவே தமிழக அரசு தமிழ்ச்செல்வனிடம் நடவடிக்கை எடுத்து எங்களின் உரிய பணத்தை பெற்றுத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு



சேலம், ஜூன் 26

சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதியில் காவிரி நீரை குடிநீர் ஆதாரமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பல்வேறு கூட்டு குடிநீர் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நேற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து மக்களுக்கும் எவ்வித தங்கு தடையும் இல்லாமல் சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தற்போது கோடை காலம் என்பதால் பொதுமக்களின் அன்றாட குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் குடிநீர் விநியோகத்தை கண்காணித்து மாவட்ட நிர்வாகம் சார்பில் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, சேலம் மாவட்டம் மேட்டூர் அணை பகுதியில் செயல்பட்டு வரும் ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 1345 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் இயல்பு நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் தொட்டிப்பட்டியில் இயங்கி வரும் பி. என்.பட்டி வீரக்கல் புதூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் இயல்பு நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும், ரெட்டியூரில் செயல்பட்டு வரும் நங்கவள்ளி மேச்சேரி ஒன்றியங்களை சேர்ந்த 698 ஊரக குடியிருப்புகள் மற்றும் பேரூராட்சி களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமை நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் நேரில் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரத்தை வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சாலை பணிகள் ஏதேனும் மேற்கொள்ளப்படும் போது குடிநீர் குழாய்கள் எவ்வித பழுதும் ஏற்படாமல் கவனத்துடன் பணிகளை மேற்கொள்ள தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகத்தில் ஏதும் தட்டுப்பாடு கால தாமதம் அல்லது குடிநீர் குழாய்கள் பழுது போன்ற பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# குமரியில் சிறுமியிடம் பாலியல் அத்துமீறல் குண்டர் சட்டத்தில் வாலிபர் கைது



நாகர்கோவில், ஜூன்.24

களியக்காவிளை அருகே மெதுகும்மெல் முண்டபிலாவிளை பகுதியை சேர்ந்த வர்கீஸ் மகன் ஜோபின் (20). இவர் அதே பகுதியை சேர்ந்த சிறுமியிடம் பாலியல் துன்புறுத்துதலில் ஈடுபட்டதாக மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிந்து கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் ஜோபின் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரையின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் மேற்படி குற்றவாளியை குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பித்தார். உத்தரவின்படி தற்போது சிறையில் இருந்து வரும் குற்றவாளி ஜோபின் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்ய இந்த நடவடிக்கை மேலும் தீவிர படுத்தப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.



# முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்க நிகழ்ச்சி

## 29 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்

தேனி, ஜூன் 26

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (25.06.2026), முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் மூலம் முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தலைமையேற்று தொழில் முனைவோர்களுக்கான கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசுகையில்,

முன்னாள் படைவீரர்களுக்கான கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெறுவதன் நோக்கம் முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொருவரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனைகளை பெறுவதையே ஆகும். அந்தவகையில் இதுபோன்ற கருத்தரங்கம் நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் குடும்ப வாரிசுதாரர்கள் கலந்துகொண்டு, சுயதொழில் மேற்கொள்வதற்கு தேவையான பயிற்சிகள் மற்றம் வங்கிக்கடன் விவரங்கள் குறித்து தெரிந்துகொண்டு, அதற்கு ஏற்றார்போல் பயிற்சிபெற்று வங்கிக் கடனுதவி மூலம் சுயதொழில் உருவாக்கி கொள்ள வேண்டும். இதன்மூலம் தாங்கள் பயன்பெறுவது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கிட முடியும்.

மேலும், மகளிர்கள் சுய உதவிக்குழுக்கள் அமைத்து தொழில்முனைவோராகப் பயன்பெறுவதற்கு மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் வழங்கப்படும் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், இன்று பெறப்பட்ட 35 மனுக்களில் பட்டா மாறுதல், மின் இணைப்பு பெயர் மாற்றம், மின்னணு குடும்ப அட்டை வேண்டுதல், வீட்டுமனைப்பட்டா உள்ளிட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். தொடர்ந்து,

முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் வழங்கும்போது அலுவலர்கள் அதற்கு தனிக்கவனம் செலுத்தி தீர்வு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.வைத்திநாதன், இ.ஆ.ப., தெரிவித்தார்.

பின்னர், 10 பயனாளிகளுக்கு ரூ.3,50,000/ கல்வி உதவித்தொகையும், 2 பயனாளிகளுக்கு ரூ.5,383/ மதிப்பிலான வீட்டுவரிச்சலுகை மீளப்பெறுதலுக்கான ஆணைகளையும், 2 பயனாளிகளுக்கு ரூ.7,280/ கண்கண்ணாடி மானியமும், 15 பயனாளிகளுக்கு ரூ.82,500/ மதிப்பிலான தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 29 பயனாளிகளுக்கு ரூ.4,45,163/ மதிப்பிலான அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) லெப்ட் கர்னல் தினேஷ், முன்னாள் படைவீரர் நலக்குழு அமைப்பாளர் இளையராஜா, விங் கமாண்டர் (ஓய்வு) கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கார்த்திகேயா வாஜ்பாய் எழுதிய "தி அன் பிகம்மிங்" நூல் வெளியீட்டு விழா



சென்னை ஜூன் 26

எழுத்தாளரும் வழக்கறிஞருமான கார்த்திகேயா வாஜ்பாய், தனது புதிய நூலான தி அன் பிகம்மிங்' நூலை சென்னை அண்ணா சாலையில் உள்ள ஹிக்கின் போதம்ஸ் புத்தக நிலையத்தில் வெளியிட்டார். நூல் வெளியீட்டு நிகழ்வில் எழுத்தாளரும் தலைமைத்துவ ஆலோசகருமான ஸ்ரீபிரகாஷ் நடாதூர் ஸ்ரீதரன் கலந்து கொண்டு, வாழ்க்கை நோக்கம்,

அடையாளம்மற்றும்தனிமனிதவளர்ச்சி குறித்து கார்த்திகேயா வாஜ்பாயுடன் உரையாடினார். ஆன்மிகப் பயிற்சிகள் குறித்து பேசுகையில், தியானம் என்பது எண்ணங்களை முற்றிலும் நீக்குவது அல்ல; மாறாக விழிப்புணர்வை வளர்ப்பதற்கான ஒரு பயிற்சி என வாஜ்பாய் விளக்கினார்.

இதுகுறித்து ஸ்ரீபிரகாஷ் கூறுகையில்,

"இந்த நூல் வெற்றி மற்றும் அடையாளம் குறித்த நம்முடைய ஆழமான நம்பிக்கைகளை மறுபரிசீலனை செய்ய அழைக்கிறது. உடனடி பலன் தெரியாவிட்டாலும், தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆன்மிகப் பயிற்சியே உண்மையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது," என்றார்.

நூல் வெளியீட்டு விழாவில் கார்த்திகேயா வாஜ்பாய் பேசுகையில், "வெளிப்புற உலகம் நிர்ணயிக்கும் இலக்குகளைத் தொடர்ந்து துரத்துவதற்குப் பதிலாக, உள்ளார்ந்த சிந்தனையின் மூலம் வாழ்க்கை தனது நோக்கத்தை வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம். ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள இந்நூல் தமிழ் உள்பட இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

இதற்கு முன்பு, அவர் எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ராமாபுரம் வளாக மாணவர்களுடன்கலந்துரையாடினார். அங்கு ராமாபுரம் மற்றும் திருச்சி வளாகங்களின் தலைவர் டாக்டர் ஆர். சிவகுமாரை சந்தித்து, தனது நூலின் பிரதியை வழங்கினார்.

### ஆண்டிபட்டி அருகே க.விலக்கில் செயல்பட்டு வரும்

# அண்ணா கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாடுகள், உற்பத்தித் திறன், தொழிலாளர் நலத்திட்டங்கள் மற்றும் எதிர்கால மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு



தேனி, ஜூன் 26

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே க.விலக்கில் செயல்பட்டு வரும் அண்ணா கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாடுகள், உற்பத்தித் திறன், தொழிலாளர் நலத்திட்டங்கள் மற்றும் எதிர்கால மேம்பாட்டு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு அரசின் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம. விஜய்பாலாஜி அவர்களை, வைகை அணை ஆய்வு மாளிகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன், பூங்கொத்து வழங்கி மரியாதையுடன் வரவேற்றார்.

தொடர்ந்து, அண்ணா கூட்டுறவு நூற்பாலையின் தற்போதைய செயல்பாடுகள், உற்பத்தி வளர்ச்சி, இயந்திரங்கள் நவீனமயமாக்கல், தொழிலாளர்களின் பணிச்சூழல் மற்றும் நலன்கள் தொடர்பாக அமைச்சர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார். மேலும், கூட்டுறவு நூற்பாலையின் வளர்ச்சிக்கானதிட்டங்கள் மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட உள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாக அலுவலர்கள், கூட்டுறவுத் துறை மற்றும் நூற்பாலை நிர்வாக அதிகாரிகள் உடனிருந்தனர். இந்த ஆய்வு மூலம் நூற்பாலையின் செயல்திறன் மேம்பட்டு, தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயர்வதுடன், மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப் படுகிறது



சென்னை, போரூர் அடுத்த, மதனந்தபுரம் சந்தோஷ் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சந்தோஷ வலம்புரி விநாயகர் பெருமான் மற்றும் ஸ்ரீ விஷ்ணு பகவான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ துர்க்கை ஆகிய தெய்வங்களுக்கு ஆலய, புனராவர்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. ஆலய தலைவர் குமார், துணைத் தலைவர் எஸ்.பாஸ்கரன், செயலாளர் விஜயராகவன், கௌரவ தலைவர் பி.பாஸ்கர், சட்ட ஆலோசகர் முத்தையன் மற்றும் ஊர் பொதுமக்கள் இணைந்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர். சிறப்பு அழைப்பாளராக மதனந்தபுரம் பழனி கலந்து கொண்டு சிறப்பித்தார். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருப்பூர் மாநகரத்திற்கு 2 புதிய டிசிபி க்கள் நியமனம்: தமிழக அரசு அதிரடி உத்தரவு

திருப்பூர், ஜூன், 26

திருப்பூர் மாநகர காவல்துறையில் காலியாக இருந்த வடக்கு மற்றும் தெற்கு பிரிவுகளுக்கான போலீஸ் துணை கமிஷனர் பணியிடங்களுக்கு இரண்டு உயர் அதிகாரிகளை நியமித்து தமிழக அரசு நேற்று அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. உத்தரவின்படி மதுரை பயங்கரவாத தடுப்புப் பிரிவு எஸ்.பி.,யாகப் பணியாற்றி வந்த ரமேஷ் கிருஷ்ணன், திருப்பூர் மாநகர வடக்கு பிரிவு போலீஸ் துணை கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் நாமக்கல் மாவட்ட சப்டிவிஷன் உதவி எஸ்.பி., யாக பணியாற்றி வந்த ஆகாஷ் ஜோஷி பதவி உயர்வு பெற்று, திருப்பூர் மாநகர தெற்கு பிரிவு போலீஸ்துணைகமிஷனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருப்பூர் மாநகரில் சட்டம்ஒழுங்கு மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேலும் பலப்படுத்தும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள இவ்விரு புதிய துணை கமிஷனர்களும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பிரிவுகளில் விரைவில் பொறுப் பேற்க உள்ளனர்.

# அருள்மிகு ஸ்ரீ நவசக்தி காமாக்ஷி அம்பாள் திருக்கோயிலில் மகா கும்பாபிஷேக விழா



சென்னை, ஜூன் 26

சென்னை மடிப்பாக்கம், கார்த்திகேயபுரம் ஏரிக்கரை தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நவசக்தி காமாக்ஷி அம்பாள் திருக்கோயில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மங்களகரமான ஸ்வஸ்திஸ்ரீ பராபவ வருஷம் ஆனி மாதம் 10ஆம் தேதி புதன்கிழமை தசமி திதி சித்ரா நக்ஷத்திரம் சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் மிதுன லக்னத்தில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இக்கோயிலானது 2009ல், முதல் முறையாக கும்பாபிஷேகம் நடைபெற்று, 18 வருடங்களுக்குப் பிறகுஇது இரண்டாவது கும்பாபிஷேகம் ஆகும்.

கோயிலின் சிறப்பானது நவவார கனி வாங்குவது, 5 பௌர்ணமிக்கு அம்பாளுக்கு மாலை அணிவிப்பது, மட்டை தேங்காய் வழிபாடு, நவராத்திரி போன்ற நிகழ்வுகள் நடைபெறுகிறது. ஆலய நிர்வாகி ராதா சேதுராமன் மற்றும் ஸ்ரீ நவசக்தி காமாட்சி அம்மன் கும்பாபிஷேக ஆலய விழா குழுவினர் கும்பாபிஷேகத்தை நடத்தினார் சாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்த பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது.



சென்னைமாவட்டம், அம்பத்தூர்வட்டாட்சியர்அலுவலகத்தில்வருவாய்தீர்வாயம் பசலி எண் 1435 அம்பத்தூர் வட்டத்திற்கு உட்பட்ட , ஒரகடம், மேனாபேடு, பட்டரவாக்கம், கொரட்டூர், அம்பத்தூர், அத்திப்பட்டு, மண்ணூர்பேட்டை, காக்கம்பள்ளம், முகப்பேர், பாடி ஆகிய கிராம மக்களுக்கு உரிய குறைகளான பட்டா, ஓ ஏ பி , வாரிசு சான்று, சாதி சான்று, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை தொடர்பான மனுக்களை ஜமாபந்தியில் பெற்று நிறைவேற்றி தருவதாக வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய் தீர்வாய அலுவலர் மு.சதீஷ் குமார் உறுதியளித்தார். உடன் நேர்முக உதவியாளர் எல்.பி. நித்தியா, வட்டாட்சியர் எஸ்.டாலி, தலைமை நில அளவர் பெருமாள், நில அளவர்கள் சந்துரு, வருண் குமார் ஆகியோர் இருந்தனர்.

# காமராஜர் நினைவிடம் உடனடியாக புதுப்பிக்கபட வேண்டும்: மு.அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன்



சென்னை, ஜூன் 26 ,

பெருந்தலைவர் காமராஜரின் நினைவிடத்தில் பராமரிப்பு பணி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதை கண்டித்து முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தலைமையில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது அவர் தெரிவித்ததாவது: முன்னாள் முதலமைச்சரும் பெருந்தலைவர் காமராஜர் 124வது கொண்டாடப்பட உள்ள நிலையில் புரனைப்பு பராமரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த திமுக ஆட்சியில் ரூ.2கோடி 60 லட்சம் ஒதுக்கி பராமரிப்புபணிகள் நடைபெற்ற நிலையில் சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு அனைத்து பராமரிப்பு பணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது கவலையளிக்கிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து காமராஜர் இல்லத்தை காண வருகை தரும் பொதுமக்கள் பூட்டி யிருப்பதை கண்டு ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

இன்னும் 20 நாட்களில் பெருந்தலைவரின் பிறந்த நாள் வரும் நிலையில் புரனைப்பு பராமரிப்பு பணியை செய்தபாடில்லை. இன்னும் 20 நாட்களில் பெருந்தலைவரின் பிறந்த நாள் வரும் நிலையில் புரனைப்பு பராமரிப்பு இந்த அரசு பணியை செய்தபாடில்லை.

124 ஆவது பிறந்த நாள் விழா கொண்டப்பட உள்ளது. காமராஜர்இல்லம் அரசுடமையாக்கப்பட்ட பிறகு அவரது இல்லம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று 2 கோடி 60 லட்சம் ரூபாய் ஒதுக்கி பராமரிப்பு செய்யமுன்னாள்முதல்வர்மு.க.ஸ்டாலின் நிதியை ஒதுக்கினார்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து காமராஜர் இல்லத்தை காண வருகை தரும் பொதுமக்கள் பூட்டியிருப்பதை கண்டு ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். அரசால் இப்பணியை செய்ய முடியவில்லை என்றால் எங்களிடம் ஒப்படையுங்கள் ஜூலை 15 குள் முடித்து காட்டுகிறோம். தமிழக அரசு உடனடியாக பராமரிப்பு பணியை தொடங்கவில்லையென்றால் தமிழகம் முழுவதிலும் மக்களை ஒன்று திரட்டி பெரும் போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்தார்.

### தருமபுரியில்

# அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டம்

## அமைச்சர், ஆட்சியர் பங்கேற்பு



தருமபுரி ஜூன் 26

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அணைத்து துறை அரசு அலுவலர்களுக்கான கலந்தாய்வுக்கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ப.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சரவணன் துறை அதிகாரிகளை அறிமுகம் செய்து வைத்து கூட்டத்தை தொடங்கி வைத்தார். கூட்டத்தில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டங்கள், பணிகள் குறித்து, நலத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் பாலக்கோடு எம்.எல்.ஏ.கே.பி.அன்பழகன், பென்னாகரம் எம்.எம்.ஏ.கஜேந்திரன், பாப்பிரெட்டிப்பட்டி எம்.எல்.ஏ. மரகதம் வெற்றிவேல் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தீராத தலைவலியின் காரணமாக

# கழுத்தை அறுத்து தற்கொலை செய்து கொண்ட பட்டதாரி பெண்

சுசீந்திரம்.ஜீன்26

சுசீந்திரம்அருகேஉள்ளகற்காடுசிவாநகரைச்சார்ந்தவர் காவியா 24 இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை இவர் எம் எஸ் சி பட்டதாரி ஆவார் இவருக்கு அடிக்கடி தலைவலி ஏற்பட்டதாக கூறப்படுகிறது பல்வேறு இடங்களில் சிகிச்சை பெற்று தலைவலி தீராத மனவிரக்தியில் இருந்து வந்துள்ளார் இந்நிலையில் நேற்று தனது வீட்டில் மரம் அறுக்கும் கட்டிங் மிஷினை எடுத்து தனது கழுத்தை தானே அருத்து ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார் இதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர் பரிசோதித்தமருத்துவர்அவர்ஏற்கனவேஇறந்துவிட்டார் எனகூறியுள்ளார்இதுகுறித்துஅவரதுதந்தைபால்பாண்டி 59 சுசிந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பேரில் சுசீந்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# திருக்குறள் குறித்த முதல்மைச்சர் பேச்சுக்கு அகில இந்திய தமிழர் கழகம் பாராட்டு



நாகர்கோவில்: ஜூன் 26

திருக்குறளை தேசிய இலக்கிய நூலாக அறிவிக்க வேண்டும் என்ற முதலமைச்சர் விஜயின் பேச்சுக்கு அகில இந்திய தமிழர் கழகம் பாராட்டுக்களை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் தெரிவித்துள்ளதாவது:

திருக்குறளை தேசிய இலக்கிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில்கலந்துகொண்டு,பிரதமரிடம்நேரில்கோரிக்கை வைத்திருந்தார் தமிழக முதலமைச்சர் விஜய் அவர்கள். அதை தொடர்ந்து சட்டமன்றத்தில் நடந்திய உரையின் போதும், திருக்குறளை தேசிய இலக்கிய நூலாக அறிவிக்க வேண்டும் என்ற தனது வெளிபாட்டை வெளிப் படுத்தியிருக்கிறார் .

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் .. எனும் திருவள்ளுவரின் தத்துவத்தை பின்பற்றி தமிழர் நெஞ்சங்களில் இடம் பிடித்த தவெக கட்சி தலைவர் முதலமைச்சர் விஜய் அவர்களுக்கு தமிழ் அறிஞர்களும் , தமிழ் அமைப்புகளும் தங்கள் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். அகில இந்திய தமிழர்கழகத்தின் சார்பில் நாமும் முதலமைச்சருக்கு பாராட்டுதலை தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார்.

# பள்ளம் லூர்துகாலனியில் வேலை செய்யும் பொழுது மாடியில் இருந்து தவறி கீழே விழுந்தவர் பரிதாப பலி

சுசீந்திரம்.ஜீன்.26

புத்தளம் அருகே உள்ள சிங்களேயர்புரியை சேர்ந்தவர் மணி இவரது மகன் சுபாஷ் வயது 43, இவர் கொத்தனார் கையால் வேலை செய்து வந்தார். நேற்று பள்ளம் லூர்துகாலனியில் மாடியில் நின்று வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயம் அடைந்தவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் சுபாஷ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து அவரதுதாயார்தங்கம்பூசுசீந்திரம்காவல்நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் தனிஷ் லியோன் வழக்கு பதிவு விசாரணை செய்து வருகிறார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.